மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருக்கழுக்குன்றம்

அ.வ.எண்.10/2008

PW 1

பெயர் : வெங்கடேசன், த/பெ.நாராயணசாமி நாள் 11.10.2022

**வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் எஸ்.எஸ்.எல்.சி.வரை படித்துள்ளேன். வேதாசல ஆச்சாரி பெயரில் உள்ள ஆவணம் எதையும் நான் பார்த்ததில்லை. வேதாசல ஆச்சாரிக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவர் பெயரில் உள்ள தனிப்பட்டா எதையும் பார்த்ததில்லை. கூட்டுப்பட்டாவில் 1.40 ஏக்கர் விஸ்தீரணம் கண்டிருந்தது. அதில் கன்னியம்மாளுக்கும், வேதாசல ஆச்சாரிக்கும் தனித்தனியாக எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். வேதாசல ஆச்சாரி எப்போது இறந்தார் என்று தெரியாது. அவருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்று தெரியுமா என்றால் இரண்டு பேர் என்று சொன்னார்கள். வாரிசு சான்று எதையும் நான் பார்க்கவில்லை. அவரது இறப்பு சான்றிதழையும் நான் பார்க்கவில்லை. வேதாசல ஆச்சாரி மகன்கள் ரத்தினம் மற்றும் கந்தசாமி ஆகியோர் பெயரிலான பட்டா அல்லது ஆவணம் எதையும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. அவர்கள் இருவருக்கும் எந்த வகையில் சொத்து பாத்தியம் என்ற விவரமும் தெரியாது.

வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her.  It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.